# அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பதிலுரை

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், சென்னையில் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களை அழைத்து, அவர்களை கௌரவிக்கும் வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மீனவ சொந்தங்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்கள். அதுபோலவே, தூத்துக்குடி மாநகரில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு கனிமொழி கருணாநிதி அவர்களும் மீனவப் பெருமக்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.

மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க, கடந்த மூன்று ஆண்டுகளில் 44 இடங்களில் மீன்பிடி இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள் மற்றும் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், எங்கெல்லாம் மீன்பிடி இறங்குதளங்கள், கடல் அரிப்பு தடுப்புச் சுவர்கள் தேவைப்படுகின்றனவோ, அந்த மீனவ கிராமங்களில் தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன்படி, நாகப்பட்டினம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் பல்வேறு மீனவ கிராமங்களில் மீன்பிடி இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள், அலைத் தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் மீன்பிடித் துறைமுக மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அண்மை கடற்பகுதியில் மீன் வளத்தினை பெருக்கிடும்பொருட்டு, சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 49 மீனவ கிராமங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடலோர மாவட்டங்களான இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரமாக மிதவைகள் மற்றும் கயிறுமூலம் கடற்பாசி வளர்த்தல் மற்றும் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்த்தல் போன்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, உள்நாட்டு மீன் வளத்தை பெரிதும் நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்க்கை மேம்பட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சு உற்பத்தியை பெருக்குதல், புதிய தொழில்நுட்பங்களுடன் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்தல், கூண்டுகளில் மீன் வளர்த்தல் மற்றும் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**மீனவர்களுக்குப் படகு ஓட்டுநர் உரிமம்!**

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் மீனவர் களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, மீன் வளம்மற்றும் மீனவர் நலத் துறையுடன் இணைந்து மீனவர்களுக்கான படகு ஓட்டுநர் உரிமம் பெற பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், இதுவரை 150 மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தில், வலை பின்னுதல் பயிற்சி வழங்கப்பட்டு, சுயதொழில் தொடங்குவதற்கான கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுவரை எந்த அரசும் செய்யாத பல திட்டங்களை மீனவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். உழைப்பின் சிகரமாய் விளங்கும் தளபதி அவர்களின் வழிகாட்டுதலில் மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட, வருங்காலங்களிலும் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும் என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மீன்வளம்மீனவர் நலத் துறை சார்பில் 23 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**அறிவிப்புகள்!**

1. சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இடநெருக்கடியை தவிர்க்கும்பொருட்டு, பாரதியார் நகர் கடற்கரை கிராமத்தில் மீனவர்கள் பிடித்து வரும் மீன்களை சுகாதாரமான முறையில் ஏலம் விடுவதற்கும், மீன்பிடி வலைகளை சரிசெய்வதற்கும், ஒரு மீன் இறங்குதளம் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு மீன் இறங்குதளம், மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், உயர் மின் விளக்கு, கழிப்பிடம் மற்றும் கழிவுநீர் வடிகால் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

2. விழுப்புரம் மாவட்டம், சின்னமுதலியார் சாவடியில் 100க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இம்மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கு ஏதுவாக, இங்கு சிறிய தூண்டில் வளைவு, ஏலக்கூடம், வலை பின்னும் கூடம் மற்றும் சாலை வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணி 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. கடலூர் மாவட்டம், சாமியார்பேட்டை மீன் இறங்குதளத்தில் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் ஏதுவாகவும் தூண்டில் வளைவு, வலை பின்னும் கூடம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் 25 கோடி ரூபாய் செலவில்

## கால்நடைகளின் உடல்நலம் பேணுதலில் தனிகவனம்!

ஏற்படுத்தப்படும். மேலும், கடலூர் முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தை தூர்வாரி ஆழப்படுத்தும் பணி 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

4. இராமநாதபுரம் மாவட்டம், சின்ன ஏர்வாடி மீனவ கிராமத்தை, கடலரிப்பிலிருந்து பாதுகாத்திடவும், படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் மற்றும் மீன்பிடி வலைகளை சரி செய்வதற்கும், தூண்டில் வளைவு மற்றும் வலை பின்னும் கூடம், 25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதன்மூலம் இங்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள 200க்கும் அதிகமான மீன்பிடி படகுகள் பயன்பெறும்.

5. தஞ்சாவூர் மாவட்டம், செந்தளைவாயல், அண்ணன் நகர் புதுத்தெரு, மந்திரிப்பட்டினம், சோமநாதப்பட்டினம், கழுமன்குடா, வல்லவன்பட்டினம், கணேசபுரம், செம்பியன்மஹாதேவி, மல்லிப்பட்டினம், மனோரா மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளிலிருந்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுவரும் படகுகளின் போக்குவரத்திற்கு ஆதாரமாக விளங்கும் கால்வாய்களில் படிந்துள்ள மணல் திட்டுகளை அகற்றி, தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகள் மொத்தம் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

6. மீனவ மகளிர் தங்களது மாற்று வாழ்வாதார தொழிலாக கடற்பாசி வளர்ப்பினை மேற்கொள்ள ஏதுவாகவும், கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் கடற்பாசி தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், தமிழ்நாட்டில் கடற்பாசி உற்பத்தியினை பெருக்கிடும் நோக்கத்தில், மிதவை முறையில் கடற்பாசி வளர்த்திட 222 மீனவ மகளிர் பயன்பெறும் வகையில் 39.88 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவேகானந்தர் நகர் கிராமத்தில் மீனவர்கள் கொண்டுவரும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் ஏதுவாக, வலைபின்னும் கூடம், மீன் ஏலக்கூடம் போன்ற உட்கட்டமைப்புகளுடன்கூடிய மீன் இறங்குதளம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை மீன் இறங்குதளத்தில் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு ஏதுவாக, பிரதான மற்றும் துணை தூண்டில் வளைவுகளை நீட்டித்தல் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் 35 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

8. தஞ்சாவூர் மாவட்டம், ஏரிப்புறக்கரை கிராமத்தில் மீனவர்களின் படகுகளை நிறுத்துவதற்கு ஏதுவாக கால்வாய் தூர்வாரி தடுப்புச் சுவர், மீன் ஏலக்கூடம், சாலை மற்றும் குடிநீர் வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் 7 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், கீழத்தோட்டம் மீனவ கிராமத்தில் அக்னி ஆற்று முகத்துவாரத்தில் தடுப்புச் சுவர் அமைத்து, மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகள் 25 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

9. மயிலாடுதுறை மாவட்டம், கீழ மூவர்கரை மீனவ கிராமத்தில் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும் மற்றும் விற்பனை செய்யவும் 5 கோடி ரூபாய் செலவில் மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், சாலை வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், தரங்கம்பாடி மீன்பிடி துறைமுகத்தில் மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் உலர் தளம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

10. தூத்துக்குடி மாவட்டம், பழையகாயல் மீனவ கிராமத்தில் மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு ஏதுவாக, படகு அணையும் தளம் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். மேலும், புன்னக்காயல் மீன் இறங்குதளத்தில் தற்போதுள்ள தூண்டில் வளைவு பகுதி அனைத்து மீன்பிடி படகுகளையும் நிறுத்த போதுமானதாக இல்லாத காரணத்தால், தூண்டில் வளைவுகளை நீட்டித்தல், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் 32 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

11. மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை விற்பனைக்காக வேறு இடங்களுக்கு தொடர் குளிர்காப்பு வசதிகளுடன் எடுத்துச்செல்லவும், தொலைதூர சந்தைகளுக்கு சென்று மீன்களை விற்பனை செய்திட ஏதுவாகவும், 71 குளிர்காப்பிடப்பட்ட வாகனங்கள் வாங்குவதற்கு 14 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

12. ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, ஆபத்து நேரங்களில் மீனவர்கள் அருகிலுள்ள மீன்பிடி படகுகளிலுள்ள மீனவர்களையோ, கரையில் உள்ளவர்களையோ தொடர்புகொள்வதற்காக 2 கோடி ரூபாய் மதிப்பில் 200 ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வாங்கிட 40 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

13. கன்னியாகுமரி மாவட்டம், பெரியநாயகி தெரு மற்றும் பள்ளம்துறை மீன் இறங்குதளங்களில் அலைதடுப்பு சுவரை தூண்டில் வளைவுடன் நீட்டித்தல், தாழ்நிலை படகு அணையும் சுவர், வலை பின்னும் கூடம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் ஒவ்வொரு மீன் இறங்குதளத்திலும் தலா 26 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

14. மயிலாடுதுறை மாவட்டம், சந்திரபாடி மீன் இறங்குதளத்தில் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு ஏதுவாக, நண்டலார் ஆற்றின் முகத்துவாரத்தினை தூர்வாரி தடுப்புச் சுவர் அமைத்தல், படகு அணையும் தளம், படகு அணையும் சுவர், சாலை வசதிகள் போன்ற இதர உட்கட்டமைப்பு வசதிகள் 32 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

15. செங்கல்பட்டு மாவட்டம், கானத்தூர் ரெட்டி குப்பம் கிராமத்தை கடலரிப்பிலிருந்து பாதுகாத்து, மீனவர்கள் தங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திட தூண்டில் வளைவு, வலைபின்னும் கூடம், சாலை வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் 19 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

16. தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் இறங்குதளத்தினை 200க்கும் மேற்பட்ட ஆழ்கடல் மீன்பிடி விசைப் படகுகள் பயன்படுத்தி வருகின்றன. இங்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், இந்த மீன் இறங்கு தளத்தினை மீன்பிடி துறைமுகமாக மேம்படுத்துதல் அவசியமாகிறது. இதற்கான பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் ஆலோசனை நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும்.

17. தமிழ்நாட்டில் பல்வேறு நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசன குளங்களில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மீனவர்களின் மீன்பிடிப்பு திறனை மேம்படுத்திட 1000 உள்நாட்டு மீனவர்களுக்கு பரிசல் மற்றும் மீன்பிடி வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்கிட ஏதுவாக 1 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும். இதன்மூலம் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடிப்புத் திறன் அதிகரிப்பதுடன் மீனவர்கள் அதிக வருவாய் ஈட்டுவதன்மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

18. தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்களின் மீன் உற்பத்தி திறனை முழுமையாக பயன்படுத்தும் வகையில், 5000 ஹெக்டேர் பரப்பளவுள்ள ஊராட்சி குளங்களில், ஒரு ஹெக்டேருக்கு 2000 மீன் விரலிகள் வீதம் 1 கோடி மீன் விரலிகள் இருப்பு செய்யப்படும். அரசு மீன் பண்ணைகளிலிருந்து 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1 கோடி மீன் விரலிகள் விநியோகிக்கப்படும். அதற்கு தேவையான போக்குவரத்து செலவினம் 25 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்திலிருந்து வழங்கப்படும். இதன்மூலம் மீன்உற்பத்தி பெருகுவதோடு ஊராட்சிகளுக்கும் அதிக வருவாய் கிடைக்கும்.

19. கைத்தூண்டில்மூலம் பிடிக்கப்படும் சூரை மீன்களின் தரம் கெடாமல் சர்வதேச சந்தைப்படுத்துதலுக்காக, அம்மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் அடங்கிய மீன் உற்பத்தியாளர் நிறுவனங்களின் தொகுப்பினை உருவாக்கி, சர்வதேச சந்தை படுத்துவதற்கான, முன்னக மற்றும் பின்னக இணைப்புகளை ஏற்படுத்தி விற்பனை செய்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பெருக்கு வதற்கான முன்னோடித் திட்டம் டாப்கோபெட் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டம், இயந்திரமயமாக்கப்பட்ட 100 நாட்டுப்படகுகளும், 500 மீனவர்களும், பயனடையும் வகையில் 2 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

20. "மீனவ மகளிர்/உலர் மீன் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களின்" தொகுப்புக்களை உருவாக்கி, அவற்றின் பயன்பாட்டிற்காக உயர் தொழில்நுட்ப சூரிய ஒளி பசுமை மீன் உலர் நிலையங்கள் உருவாக்கி அதில் சுகாதாரமான முறையில் தரமான உலர் மீன்களின் தயாரிப்பை மேம்படுத்தி, டாப்கோபெட்மூலம் சந்தைப்படுத்தி மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிட 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

21. மீன்பிடி படகுகளை இயக்க மண்ணெண்ணெய் பயன்படுத்துவதால் காற்று மாசு உண்டாகிறது. எனவே, "எரியெண்ணெய் மாற்று உபகரணம்" பொருத்தப்பட்ட 400 புதிய வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மற்றும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள இயந்திரங்களுக்கு எரியெண்ணெய் மாற்று உபகரணங்கள் மானிய விலையில் வழங்கும் "பசுமை கடல்வளத் திட்டம்" 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

22. நாகப்பட்டினம் மாவட்டம், செருதலைக்காடு மீனவ கிராமத்தில், மீன் இறங்கு தளம் அமைந்துள்ளது. இங்கிருந்து, சுமார் 4500க்கும் மேற்பட்ட மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இக்கிராம மக்கள் படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமாகக் கையாளவும், மீன்பிடி இறங்குதளத்தில் தூர்வாரும் பணி மற்றும் மீன் ஏலக்கூடம் அமைக்கும் பணி ஆகியன 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

23. புதிதாக துவங்கப்பட்ட மாவட்டங்களான தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில், கடல்வளம், உள்நாட்டு மீன்வளம், உவர்நீர் மீன்வள மேலாண்மை, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு ஆகிய மீன்வளப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தும் வகையிலும், மீன்வள உட்கட்டமைப்பு திட்டங்களை சிறப்பாகவும், உரிய காலத்திலும் செயல்படுத்திடவும் துறை மறுசீரமைப்பு செய்யப்படும்.

உழைப்பின் இலக்கணமாக விளங்கும் முதலமைச்சர் அவர்களுடைய சீரிய தலைமையில் நாங்கள் அயராது உழைப்போம் என்ற செய்தியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் அரசு அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா அவர்களுக்கும், அரசு முதன்மைச் செயலாளர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆணையர் சுங்சோங் ஜடக் அவர்களுக்கும், கால்நடைப் பாரமரிப்பு இயக்குநர் திருமதி எஸ். அமிர்தஜோதி அவர்களுக்கும் மற்றும் துறை அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான முயற்சியைத் துறை மேற்கொள்ளும். அதுபோல இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர் அதிகபேர் கிளை நிலையங்கள் வேண்டும். கிளை நிலையங்களை உயர்த்த வேண்டும் என்ற வகையிலே கேட்டார்கள். அதுவும் நிதிநிலைக்கேற்றாற்போல் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் காண்போம்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். உறுப்பினர்களின் அனைத்து கோரிக்கைகளும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று முதல்வரின் ஆலோசனையைப்பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத்தீர்மானங்களைத் திரும்ப பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.இராதா கிருஷ்ணன் பதிலுரை வழங்கினார்.

---

மோடி அரசுக்கு தேர்வு நடத்த வக்கில்லை!

# 'நீட்' தேர்வு முறைக்கு நிரந்தர விடை தருவதே ஒரே வழி!

## 'தீக்கதிர்' தலையங்கத்தில் சாடல்!

சென்னை, ஜூன் 25-

மோடி தலைமையிலான அரசுக்கு நீட் தேர்வு நடத்த வக்கில்லை என்றும், நீட் தேர்வு முறைக்கு நிரந்தர விடை தருவதே ஒரே வழி, எனவும் கல்வித் துறையை மாநில அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தி 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் ஒன்றிய அரசை சாடியுள்ளது.

அது வருமாறு:-

மருத்துவ முதுநிலை சேர்க்கைக்கான நீட் தேர்வு (பி.ஜி.நீட்) ஒத்தி வைக்கப்பட்டுள்ளது கடுமையான கண்டனத்திற்குரியது. தேசிய தேர்வு வாரியம் நடத்தும் யு.ஜி.சி. நெட் தேர்வு ரத்தானதைத் தொடர்ந்து முதுநிலை மருத்துவ சேர்க்கைக்கான நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதன் மூலம் இந்த தேர்வு முறையே மோசடியானது, முறை கேடானது, அர்த்தமற்றது என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணமாகியுள்ளது.

தகுதி, தரம் என்ற வார்த்தைகளைக் கொண்டு புனையப்பட்டுள்ள நீட் தேர்வை நடத்தும் தகுதியோ தரமோ ஒன்றிய அரசுக்கு தேசிய தேர்வு வாரியத்திற்கும் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் லட்சக்கணக்கான மாணவர்கள் நீட் தேர்வு எழுத தயாராக இருந்த நிலையில் சனிக்கிழமை இரவு இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதானது மருத்துவ உயர்கல்வி கனவோடு இருந்த மாணவர்களின் தலையில் இடியாக இறங்கியுள்ளது. மாணவர்களின் நலனையும், மனநலனையும் ஒன்றிய அரசு கொஞ்சம் கூட கருத்தில் கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது.


தீக்கதிர்
2024, ஜூன் 24 திங்கட்கிழமை
நீட் தேர்வு – ஒன்றிய அரசுக்கு தகுதியோ தரமோ இல்லை
மருத்துவ முதுநிலை சேர்க்கைக்கான நீட் தேர்வு(பி.ஜி.நீட்) ஒத்தி வைக்கப்பட்டுள்ளது கடுமையான கண்டனத்திற்குரியது தேசிய தேர்வு வாரியம் நடத்தும் யுஜிசி - நெட் தேர்வு ரத்தானதைத் தொடர்ந்து முதுநிலை மருத்துவ சேர்க்கைக்கான நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதன் மூலம் இந்த தேர்வு முறையே மோசடியானது, முறை கேடானது, அர்த்தமற்றது என்பது மீண்டும் ஒரு முறை நிரூபணமாகியுள்ளது.
தகுதி, தரம் என்ற வார்த்தைகளைக் கொண்டு புனையப்பட்டுள்ள நீட் தேர்வை நடத்தும் தகுதியோ தரமோ ஒன்றிய அரசுக்கு தேசிய தேர்வு வாரியத்திற்கும் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.
ஞாயிற்றுக்கிழமை காலையில் லட்சக்கணக்கான மாணவர்கள் நீட் தேர்வு எழுத தயாராக இருந்த நிலையில் சனிக்கிழமை இரவு இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதானது மருத்துவ உயர்கல்வி கனவோடு இருந்த மாணவர்களின் தலையில் இடியாக இறங்கியுள்ளது. மாணவர்களின் நலனையும், மனநலனையும் ஒன்றிய அரசு கொஞ்சம் கூட கருத்தில் கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது.

முதுநிலை மருத்துவத்திற்கான நீட்தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களுக்கு பல நூறு கிலோமீட்டர்களுக்கு அப்பால் தேர்வு மையம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்பே தேர்வு எழுதும் மையம் அமைந்துள்ள ஊர்களுக்கு மாணவர்கள் சென்று தங்கியிருந்த நிலையில் இரவு திடீரென தேர்வு ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்மையாகவும், வெளிப்படையாகவும் இந்த தேர்வை நடத்த வக்கில்லை என்றால் குறைந்தபட்சம் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாகவே தேர்வு ஒத்திவைக்கப்படுவதை அறிவித்திருக்கலாம்.

இந்தியா முழுவதும் 297 மையங்களில் 2லட்சத்து 28 ஆயிரத்து 757 மருத்துவர்கள் நீட் தேர்வு எழுத தயாராக இருந்தனர். காலை 9 மணிக்கு தேர்வு துவங்கவிருந்த நிலையில் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகவே தேர்வு மையத்திற்குச் சென்றுவிட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தேர்விலும் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் எதிர்காலத்தில் இந்தத் தேர்வின் மூலம் எழும் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காகவும் தேர்வை ஒத்திவைப்பதாக ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது. இதன் மூலம் இது வரை நடந்த நீட் தேர்வுகளில் முறைகேடு நடந்துள்ளது என்பதை ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.


முறைகேடுகள் தடுக்கப்பட வேண்டுமானால் நீட் தேர்வு முறைக்கு நிரந்தர விடை தருவது ஒன்றே வழி. கல்வித்துறையை மாநில அரசின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக மீண்டும் கொண்டுவருவதும் அந்தந்த மாநிலங்களில் உயர் கல்விக்கான சேர்க்கையை மாநில அரசே முடிவு செய்துகொள்ள விட்டுவிடுவதும் ஒன்றே இந்தச் சிக்கல்களுக்கு நிரந்தரத் தீர்வு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஜி.பி. சோமசுந்தரம்**
**ஜூன் 25 (1971)**



**கழகத்தின் முதுபெரும் தலைவர். "பட்டாளத்துச் சிங்கம்" எனவும், "சேலத்துப் பெரியார்" எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.**

**கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**